# TNPSC GROUP II MAIN EXAM 2024

## WALKIN TEST III

## கட்டாய தமிழ் தகுதித் தேர்வு

**Total Marks: 100** **Time : 3 hrs**

**கேள்வி எண் 1** **10 மதிப்பெண்கள்**

1. **பின்வரும் பகுதியை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து எழுதுக**

தேவேந்திரநாத் மிதவாதச் சீர்திருத்தவாதியாவார். ஆனால் சமாஜத்தில் அவருடன் பணியாற்றிய இளையவர்கள் விரைவான மாற்றங்களையே விரும்பினர். அவர்களுள் மிக முக்கியமானவரான கேசவ் சந்திர சென் (1838-84), 1857 இல் சபையில் இணைந்தார். கிறித்தவமதத்தால் பெருமளவில் கவரப்பட்ட அவர் கிறித்தவமதத்தின் சாரத்தை நம்பினார். 1886இல் பிரம்மசமாஜத்தின் உறுப்பினர்களிடையே பிளவு ஏற்பட்டதால் கேசவ் சந்திர சென் சமாஜத்திலிருந்து விலகி புதிய அமைப்பொன்றை உருவாக்கினார். இதன்பின்னர் தேவேந்திரநாத் தாகூரின் அமைப்பு 'ஆதி பிரம்ம சமாஜம்' என அழைக்கப்படலாயிற்று.

**கேள்வி எண் 2:** **10 மதிப்பெண்கள்**

2. **பின்வரும் பகுதியைத் தமிழில் மொழிபெயர்க்கவும்**

Popularly known as Vallalar, Ramalinga Swamigal or Ramalinga Adigal (1823–1874), was born in Marudhur, a village near Chidambaram. After his father's death, his family moved to his brother's house at Chennai. Despite having no formal education he gained immense scholarship. Ramalinga emphasised the bonds of responsibility and compassion between living beings. He expressed the view that 'those who lack compassion for suffering beings are hardhearted, their wisdom clouded'. He showedhis compassion and mercy on all living beingsincluding plants. This he called jeevakarunya.

**கேள்வி எண் 3:** **10 மதிப்பெண்கள்**

3. **கீழ்க்காணும் பகுதியை அதன் அளவில் மூன்றில் ஒரு பங்கு அளவில் சுருக்கி உங்கள் சொந்த நடையில் எழுதுக. தலைப்புத் தேவையில்லை**

**காந்தியடிகள் உருவாகிறார்**

குஜராத்தின் போர்பந்தரில் ஒரு வசதியான குடும்பத்தில் 1869 அக்டோபர் 2 ஆம் நாள் மோகன்தாஸ் கரம்சந்த் காந்தி பிறந்தார். அவரது தந்தையார் காபா காந்தி, போர்பந்தரின் திவானாகவும் பின்னர் ராஜ்கோட்டின் திவானாகவும் பொறுப்பு வகித்தார். தீவிர வைணவ பக்தையான அவரது தாயார் புத்லிபாயின் தாக்கம் இளையவரான காந்தியின் நடவடிக்கைகளில் பெரிதும் இருந்தது. பதின்ம பள்ளிப் (மெட்ரிகுலேசன்) படிப்பை முடித்த காந்தியடிகள் சட்டம் பயில்வதற்காக 1888 இல் இங்கிலாந்துக்குக் கடல்பயணம் மேற்கொண்டார். 1891 ஆம் ஆண்டு ஜூன் மாதம் வழக்கறிஞர் பட்டம் பெற்ற பின்பு அவர் பிரிட்டிஷாரின் நீதி மற்றும் நியாய முறையில் நம்பிக்கை கொண்டவராக இந்தியாவுக்குத் திரும்பினார். லண்டனில் அவருக்கு கிடைத்த அனுபவங்கள் தென்னாப்பிரிக்காவில் அவர் எதிர்கொள்ளவிருந்த இனவேறுபாட்டுக்கு அவரைத் தயார்படுத்தியிருக்கவில்லை.

இந்தியா திரும்பியவுடன் பம்பாயில் வழக்குரைஞராக பணியாற்ற காந்திடிகள் மேற்கொண்ட முயற்சி தோல்வியடைந்தது. அந்த காலகட்டத்தில்தான் தென்னாப்பிரிக்காவில் இருந்த குஜராத்தி நிறுவனம் ஒன்று சட்ட உரிமை வழக்குகள் தொடர்பாக காந்தியடிகளின் சேவையை நாடியது. இந்த வாய்ப்பை ஏற்றுக்கொண்ட காந்திடியகள் 1893 ஏப்ரல் மாதம் தென்னாப்பிரிக்காவுக்குப் புறப்பட்டுச் சென்றார். தென்னாப்பிரிக்காவில்தான் முதன் முறையாக அவர் இனவெறியை எதிர்கொண்டார். டர்பனில் இருந்து பிரிட்டோரியாவுக்கு ரயில்பயணம் மேற்கொண்டபோது பீட்டர்மாரிட்ஸ்பர்க் ரயில் நிலையத்தில் முதல் வகுப்புப் பெட்டியிலிருந்து வலுக்கட்டாயமாக வெளியேற்றப்பட்டார். கூலிகளைப் போன்றுதான் இந்தியர்கள் நடத்தப்பட்டனர். ஆனால் காந்திடியகள் இதை எதிர்த்துப்போராட உறுதி பூண்டார்.

காந்தியடிகள் டிரான்ஸ்வாலில் உள்ள இந்தியர்களின் கூட்டத்தைக் கூட்டி அவர்கள் தங்களுடைய குறைகளை உறுதியுடன் வெளிப்படுத்தி களைவதற்காக ஓர அமைப்பை ஏற்படுத்தவேண்டும் என்று அறிவுறுத்தினார். இது போன்ற கூட்டங்களைத் தொடர்ந்து நடத்திய அவர், அந்த நாட்டின் சட்டங்களை மீறும் விதமாக நடந்த அநீதிகள் தொடர்பாக நிர்வாகத்தினருக்கு மனுக்களை அளித்தார். டிரான்ஸ்வாலில் வசித்த இந்தியர்கள் தலை வரியாக 3 பவுண்டுகளை செலுத்த வேண்டியிருந்தது. அவர்களுக்கென குறிக்கப்பட்ட பகுதிகளை விடுத்து வேறு இடங்களில் அவர்கள் நிலத்தை சொந்தமாக வைத்துக்கொள்ள முடியாதநிலை இருந்தது. இரவு 9 மணிக்குப் பிறகு அனுமதியின்றி வெளியிடங்களுக்கு செல்லமுடியாத நிலையும் இருந்தது. இத்தகைய நியாயமற்ற சட்டங்களை எதிர்த்து அவர் போராட்டத்தைத் தொடங்கினார்.

காந்தியடிகளுக்கு டால்ஸ்டாய், ஜான் ரஸ்கின் ஆகியோரின் எழுத்துக்களுடன் அறிமுகம் கிடைத்தது. “கடவுளின் அரசாங்கம் உன்னில் உள்ளது (The Kingdom of God is within you) என்ற டால்ஸ்டாயின் புத்தகம், “அண்டு திஸ்லாஸ்ட்“ (undo this Last) என்ற ஜான் ரஸ்கின் எழுதிய புத்தகம் தாரோவின் “சட்டமறுப்பு“ (Civil Disobedience0 ஆகிய புத்தகங்களால் காந்தியடிகள் பெரும் தாக்கத்திற்குள்ளானார். இந்திய மற்றும் மேற்கித்திய சிந்தனையாளர்களின் கலவையாக காந்தியடிகளின் சிந்தனைகள் உருவாகின. மேற்கத்திய சிந்தனையாளர்களால் பெரிதும் காந்தியடிகள் ஈர்க்கப்பட்டாலும் மேற்கத்திய நாகரிகம் மற்றும் தொழில்மயமாக்கல் ஆகியவை குறித்து அவர் அதிதீவிரமாக விமர்சித்தார். ரஸ்கின் அவர்களால் பெரிதும் ஈர்க்கப்பட்ட காந்தியடிகள் ஃபீனிக்ஸ் குடியிருப்பையும் (1905) டால்ஸ்டாய் பண்ணையையும்ட (1910) நிறுவினார். சமத்துவம், சமூக வாழ்க்கை, தொழில் மீது மரியாதை ஆகிய நற்பண்புகள் இந்தக் குடியிருப்புகளில் ஊக்கப்படுத்தப்பட்டன. சத்தியாகிரகிகளுக்கு இவை பயிற்சிகளங்களாகத் திகழ்ந்தன.

**கேள்வி எண் 4:** **10 மதிப்பெண்கள்**

4. **பின்வரும் பகுதியைக் கவனமாகப் படித்து, அதன் இறுதியில் உள்ள வினாக்களுக்கு சுருக்கமாகவும், தெளிவாகவும் சரியான விடை எழுதுக**

புறநானூறு என்னும் நூலில் அறப்போர் குறித்த செய்திகள் இடம்பெற்றுள்ளன. அரசன் ஒருவன் மற்றொரு நாட்டு அரசன் மீது போர் தொடுக்கும் முன்பு, பசுக்களையும், அறவோரையும், பெண்களையும் பிணியாளர்களையும் போர் நிகழும் இடத்தைவிட்டு புறத்தே போய்விடும்படி எச்சரித்த பின்னரே படையெடுப்பு நிகழும். இந்த அறப்போர் முறை முதுகுடுமிப் பெருவழுதியிடம் அமைந்திருந்ததாக நெட்டிமையார் என்ற புலவர் பாராட்டுகிறார். மேலும், படையெடுத்து வரும் பகைவன் மீது மறைந்து நின்று அம்பு எய்தும் நிலையங்கள் ‘ஞாயில்கள்’ என்று அழைக்கப்பட்டன.

**வினாக்கள்**

1. பத்தியில் இடம்பெற்றுள்ள நூலின் பெயர் யாது?
2. நெட்டிமையாரால் பாராட்டப்படும் அரசர் யார்?
3. ‘ஞாயில்கள்’ என்றால் என்ன?
4. போருக்கு முன்னர் புறத்தே போய்விடும்படி எச்சரிக்கப்படுபவர்கள் யாவர்?
5. பிணி என்பதன் பொருள் யாது?

**கேள்வி எண் 5:** **10 மதிப்பெண்கள்**

5. **பின்வரும் சுருக்கக் குறிப்பிலிருந்து விரிவாக்கம் செய்தல் (300 வார்த்தைகளுக்கு மிகாமல்)**

**நாட்டுப்புறக் கைவினைக் கலைகள் - மண்பாண்டக்கலை - சுடுமண் சிற்பக்கலை - மூங்கில் கைவினை**

**கேள்வி எண் 6:** **15 மதிப்பெண்கள்**

6. **பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்று குறித்து 300 சொற்களில் கட்டுரை வரைக**

1. நீத்தார் பெருமை அதிகாரம் மூலம் வள்ளுவர் கூறும் கருத்துக்கள் யாவை?
2. இல்வாழ்க்கையின் சிறப்புகளாக வள்ளுவர் கூறும் கருத்துக்கள் யாவை?
3. ஈகையின் பெருமையை வள்ளுவர் வழி நின்று உரைக்க
4. நிலையாமையின் அதிகாரம் வாயிலாக வள்ளுவர் உணர்த்துவன யாது?
5. பெரியாரைத் துணைக்கோடல் அதிகாரம் மூலம் நீவிர் அறிவன யாவை?

**கேள்வி எண் 7:** **15 மதிப்பெண்கள்**

**அலுவலகக் கடிதம்**

தொழில்நுட்பக் கல்வி – அரசு / அரசு நிதியுதவி பெறும் பாலிடெக்னிக் கல்லூரிகள் மற்றும் அரசு / அரசு நிதியுதவி பெறும் பொறியியல் கல்லூரிகளில் நவீன ஆய்வக உபகரணங்கள் / கணினிகள் மற்றும் கணினி சார்ந்த பொருட்கள் / அறைகலன்கள் ஆகியவற்றை கொள்முதல் செய்வது – முதல்வரின் நிதி அதிகார உச்சவரம்பினை உயர்த்துதல் தொழில்நுட்பக்கல்வி ஆணையர் நிலையிலேயே அனுமதி வழங்கியது – பின்னேற்பு வழங்குதல் குறித்து ஒரு அரசாணை வரைக.

**கேள்வி எண் 8:** **20 மதிப்பெண்கள்**

**a. கீழ்க்காணும் சொற்களை உமது சொந்த வாக்கியத்தில் அமைத்து எழுதுக**

1. மட்டற்ற
2. வெற்றிவாகை
3. அறிதல்
4. பயணம்

**b. பின்வரும் இணைச் சொற்களைப் பயன்படுத்தி ஒரே தொடர் அமைக்க**

1. மலையும் மடுவும்
2. விருப்பு வெறுப்பு
3. ஆண்டான் அடிமை
4. அன்பும் அருளும்

**c. பிரித்து எழுதுக**

1. முகந்திரிந்து
2. வெள்ளத்தனைய
3. அளவிறந்து
4. கல்லெடுத்து

APP WORLD STUDY CENTRE

**d. எதிர்மறை வாக்கியமாக மாற்றி எழுதுக**

1. வகுப்பில் மாணவர்கள் அமர்ந்தனர்
2. அவன் கல்வி கற்றான்
3. யாழினி சிலப்பதிகாரம் கற்றாள்
4. இலக்கியா புத்தாடை அணிந்தாள்

**e. பிழை நீக்கி எழுதுக**

1. நேற்று தென்றல் காற்று அடித்தது.
2. தென்னை மட்டையிலிருந்து நார் எடுத்தார்.
3. அணில் பழம் சாப்பிட்டது.
4. கொடியில் உள்ள மலரை எடுத்து வா.

APPOLO STUDY CENTRE